**கவனிக்க.**-2023.01.13 ஆந் திகதிய 2315 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2316 - 2023 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2023.01.20

2316 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 6 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023 சனவரி மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

5 - B 082420 - 353 (2023/01)

# நானாவித அறிவித்தல்கள்

## எஸ் ஓ எஸ் சிறுவர் கிராம இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குமாரசிறி ரத்னாயக்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "எஸ் ஓ எஸ் சிறுவர் கிராம இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைகொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) இலங்கையினுள் எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமங்களை தாபித்தல்;

(ஆ) எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமங்களில் வாழும் பிள்ளைகளுக்கு குடும்பத்தையொத்த முழுமையான பராமரிப்பினை வழங்குதல், மற்றும்,

(இ) தாய்மார் மற்றும் பிள்ளைகளுக்கான சமூக நிலையங்களை தாபித்தல், ஹர்மன் மைனர் கல்லூரிகளை தாபித்தலும் தொழில் பயிற்சி நிலையங்களை தாபித்தலும்,

பிறவும் ,

குமாரசிறி ரத்னாயக்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

01- 184

---

## பிரக்ஞாபந்து புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ரூபசிங்ஹகே பிரதீப் சமன் குமார உந்துகொட ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பிரக்ஞாபந்து புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" என அழைக்கப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க உள்ளேன் என்பதை இத்தால் அறியத்தர விரும்புகின்றேன்.

பின்வரும் குறிக்கோளைக் கொண்டமைந்த மேற்குறித்த புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை கூட்டிணைப்பது சட்டமூலத்தின் நோக்கமாக அமைகின்றது.

01. தமது ஆரம்பக் கல்வியை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த இளைஞர் யுவதிகளுக்கு, நிலைமையின் பிரகாரம், அவர்களின் தொழில் மற்றும் /அல்லது தொழில்நுட்ப மற்றும் /அல்லது தொழில்சார் திறன்கள் மற்றும் தொழில்நுட்ப மற்றும்/ அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்காக உயர் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் நிதி உதவிகளை வழங்குவதற்காக புலமை பரிசில்களை வழங்குதல்;

02. வேறு கல்வித் துறைகள் மற்றும்/அல்லது நிறுவனங்கள் மற்றும் /அல்லது தொழில்நுட்ப முகாமைத்துவ மற்றும் /அல்லது உயர் கல்வி நிறுவனங்கள் , பாடசாலைகள், மன்றங்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் மற்றும்/அல்லது வேறு உயர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதற்கு நிகரான நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் /அல்லது தாபிப்பதற்கு ஆதரவளித்தல்;

03. விரிவுரையாளர்களின், ஆசிரியர்களின் மற்றும் தொழில்நுட்ப கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தின்பால் ஈடுபட்டுள்ள அத்தகைய நபர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் உதவிகளை வழங்குதல்;

04. நிதியத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான அல்லது பொருத்தமான சகல மற்றும் /அல்லது ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல், என்பனவாகும்.

பிரதீப் உந்துகொட,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

01- 185

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.